# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் -14

# பாதாளமும் நரகமும்



Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# பாதாளமும் நரகமும்



கிறிஸ்து இயேசுவுக்குள் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

மனித ஆத்துமா மரிக்கிறது என்றும், மரணத்திற்குப்பின் அது ஜீவிப்பது இல்லை அல்லது அதற்கு ஜீவன் இல்லை என்றும் சென்ற வகுப்புக்களில் ஆராய்ந்து அறிந்தோம்.

அதைத்தொடர்ந்து இன்று நரகம் என்றால் என்ன என்று ஆராயலாம்.
பொதுவாக நரகம் என்பது தேவனால் ஏற்படுத்தப்பட்ட தண்டனைக்கான அக்கினி ஸ்தலம் என்றும், அங்கு மரிக்காத ஆத்துமாக்கள் நித்திய காலத்திற்கும் வாதிக்கப்படுவதாக எல்லா மதத்தினரும் நம்புகிறார்கள்.

இது தேவனால் உண்டாக்கப்பட்ட ஏற்பாடு என்றும், தேவனே நரகத்தை உருவாக்கினார் என்றும் நம்பப்படுகிறது.

மேலும் பிசாசு ‘நரகத்தின் அதிகாரி” என்றும், அவர் நரகத்திலிருந்தாலும் அதின் அக்கினியை எதிர்க்கும் சக்திகொண்டவராக, வீட்டில் வசிப்பவர்போல நரகத்தில் சுகமாக இருக்கிறார் என்றும் நம்பப்படுகிறது.

மேலும் நரகத்தில் மனிதனைப் போடும்போது அவனுடைய உடல் வேகாமலும், அதே சமயத்தில் உயிரோடு, சதா காலங்களிலும் வேதனை தருவதாகவும் சிலர் நம்புகின்றனர். இன்று அநேக ஊழியக்காரர்கள் நரகம் சென்று பார்த்ததாகவும், அங்கு கோடிக்கணக்கான ஜனங்கள் ஐயோ அம்மா என்று ஓயாமல் கூச்சலிட்டு வருவதாகவும் பிரசங்கங்களிலும் புத்தகங்களிலும் கூறி வருகின்றனர்.

ஜனங்களில் அநேகர் நரக வேதனைக்கு பயப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொள்கின்றனர். சகோதர சகோதரிகளே, இவை மட்டுமல்லாது சில ஆலயங்களில் நரகம் பற்றிய படங்கள் இன்றுகூட மாட்டி வைத்துள்ளனர். அவ்வாறிருக்கும்போது ஒரு சிந்திக்கும் கிறிஸ்தவன் இது பற்றிய முழுமையான ஆராய்ச்சி செய்து, வேதம் இது சம்பந்தமாக என்ன கூறுகிறது(ஏசாயா 8:20) என்று அறிந்து அதின்மேல் விசுவாசம் வைத்தால் அது மகா பரிசுத்தமான விசுவாசமாயிருக்குமல்லவா?

அநேகர் இது சம்பந்தமான ஆராய்ச்சி இல்லாமல் இருப்பதை நாம் இவ்வுலகில் காணமுடிகிறது. இந்தக் காரியத்தைக் குறித்த வசனங்களை ஆராய்வதற்கு முன்பு,நீதிமன்றத்தில்

நடந்த ஒரு சிறு சம்பவத்தைக் காணலாம்.

அங்கு நகைத் திருட்டு குற்றத்திற்கான நியாயத்தீர்ப்பு விசாரணை நடைபெற்று, வாத பிரதிவாதம் முடிவடைந்தவுடன், அந்த நபர் செய்த குற்றத்திற்கான தண்டனை **'சாகும்வரை தூக்கிலிடவேண்டும்"** என்று தீர்ப்பளிக்கப்பட்டது. **அப்படிப்பட்ட தண்டனை கொடுத்தால்தான் இவன்போன்ற திருடர்களுக்கு ஒரு எச்சரிப்பாக அமையும்"** என்றார் நீதிபதி. உடனே ஜனங்கள் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்து, தீர்ப்பு என்பது நியாயமானதாக இருக்கவேண்டும். ஒருவரை கொலை செய்தவருக்கும் மரணதண்டனை, திருடியவருக்கும் மரணதண்டனை என்பது நியாயமான தீர்ப்பில்லையே. ஆகவே நகை திருடியவர் திருந்தி வாழும்வகையில், அவருக்கு ஒரு நீதியான தீர்ப்பு வழங்கவேண்டும் என்றனர்.

அதுமட்டுமல்ல, இன்று உலகில் இலட்சம் பேரைக் கொலை செய்தவருக்கு சில நாட்கள் சென்று மரணதண்டனை கொடுக்க திட்டமிடும்போது, உலகமே அதை எதிர்க்கின்றதே. பாவி ஜனங்களுக்குள்ளேயே நீதியான தீர்ப்பு, மன்னிப்பு, அன்பு இருக்கும்போது, மகா பரிசுத்தமான தேவனுடைய நீதி எவ்வளவு உயர்ந்ததாயிருக்கும் சற்று யோசித்துப்பாருங்கள்.பாவத்திற்கான அவருடைய தண்டனையும் எப்படிப்பட்டதாக இருக்கும். அவர் பாவத்திற்கு ஒரு நீதியான தண்டனை கொடுக்கமாட்டாரா? நீதி அவருடைய **'ஆதாரம்".**

> "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம். கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும" -சங்கீதம் 89:9-14

ஆகையால் மனிதர்களுடைய பாவத்திற்கான தண்டனை நீதியான தண்டனை என்னவாக இருக்கும்? மனுக்குலம் முழுவதும் பாவிகள் என்றும், பாவம் கண்டிப்பாக தண்டிக்கப்படவேண்டும் என்றும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, மனிதர்களுடைய பாவத்திற்கான நீதியான தண்டனை தான் என்ன?
இதை நாம் ஒரு உதாரணத்தின் மூலம் நிதானிக்கலாம்.

மனிதனுக்கு ஒரு நாள் என்பது இருபத்தி நான்கு மணிநேரம் கொண்டதாகும்.

**அதில் 8மணிநேரத்தை தூக்கத்தில் செலவழிக்கிறான்**
**8 மணிநேரத்தை பணிபுரிவதற்காக செலவிடுகிறான்**
**உண்பது குளிப்பது போன்றவை இன்னொரு 2மணிநேரத்தை எடுத்துக்கொள்கிறது. அப்படியானால் மீதமிருப்பது 6 மணிநேரமே. அந்த 6மணிநேரத்தில் ஒவ்வொரு நிமிடமும் மனிதன் தொடர்ச்சியாக பாவம் செய்வதாக நாம் நினைத்துக்கொள்வோம். அப்படியானால் 80 வருட ஆயுட்காலத்தில் அவன் இருபது வருடம் முழுமையாக பாவம் செய்திருக்கவேண்டும். இந்த 20 வருட பாவத்திற்கு ஒரு நியாயமான தண்டனை என்றால் அது எவ்வளவாக இருக்கும்?**

எரி நரகத்தில் 200 கோடிஆண்டுகளாக இருக்குமா? அல்லது நித்திய காலமாக இருக்குமா?

ஆனால் இப்படித்தானே நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்?
இது நீதியா.. சிந்தியுங்கள்...
பாவத்திற்கான தண்டனையைக் குறித்து வேத வசனங்கள் போதிப்பது இது தானா? இல்லை இதைக் குறித்து நாம் வாசிக்கையில்,

ரோமர் 6:2,3 -“பாவத்தின் சம்பளம் மரணம”



ஆம். பின்பு நரகம் என்பது என்ன?வேத வசனங்கள் நரகத்தைக் குறித்து போதிப்பது என்ன?என்ற ஆராய்ச்சி மிகமிக முக்கியமானது என இப்போது அறிந்திருப்பீர்கள்.

முதலாவது நரகம் என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்தில், 'Hell“ என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். இந்த Hell என்பதன் உண்மையான பொருள் மறைத்தல்(To Hide) அல்லது மூடிவைத்தல் (To Cover)ஆகும். தமிழில் நரகம் என்பது நரர் அகம் = நரகம். அதாவது மனிதர் இருக்கும் இடம்.

இப்படியாக ஐரோப்பிய விவசாயிகள் பேசும்பொழுது,

“I must Hell my Potatoes”- ‘நான் என் கிழங்குகளை புதைக்கவேண்டும்“ என்று கூறுவது வழக்கம்

“I must Hell my House” - நான் என் வீட்டை மூடவேண்டும் என்று கூறுவது வழக்கம்.

இங்கு கவனிப்போமேயானால் Hell என்ற வார்த்தை மறைத்து வைப்பதற்கு அல்லது மூடி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதை உணரலாம். ஆனால் இன்று Hell (நரகம்) என்பது வேதனை ஸ்தலம் என்ற முற்றிலும் வேறுபட்ட பொருளைத் தருகிறது. இப்பொழுது நரகத்தைபற்றி வேதம் சொல்லும் சத்தியத்தைக் காணலாம்.

ஆங்கில வேதாகமத்தில், நான்கு மூல பாஷைகளின் வார்த்தைகளிலிருந்து Hell என்று மொழிபெயர்க்கப்படுகிறது.
அவைகளில் ஒன்று எபிரேய வார்த்தை, மூன்று கிரேக்க வார்த்தைகள்.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| ஷியோல் **Sheol** | ஹேடஸ், கெஹன்னா, டார்ட்டாரு **Hades, Gehenna, Tartaroo** |

இந்த வார்த்தைகளைப் பற்றின ஆராய்ச்சி, வேதத்தில் போதிக்கப்படுகிற நரகத்தைப் பற்றின சத்தியத்தை வெளிப்படுத்துகிறது.

வேதத்தில் Hell என்ற வார்த்தை 53 முறை காணப்படுகிறது.(பழைய ஏற்பாட்டில் 31முறையும், புதிய ஏற்பாட்டில் 22 முறையும்). இப்பொழுது பழையஏற்பாட்டில் உள்ளதைக் குறித்து ஆராயலாம்.

## ஷியோல்(Sheol) - 31 முறை

பழைய ஏற்பாட்டில் நரகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள எபிரேய வார்த்தை ஷியோல்(Sheol) ஆகும். ஷியோல்(Sheol) என்ற வார்த்தை பழையஏற்பாட்டில் மொத்தம் 65முறை காணப்படுகிறது.

**31முறை நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**
**31முறை பாதாளம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**
**3 முறை படுகுழி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது**

ஆம். மொத்தம் 65முறை இச்சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் ஷியோல்(Sheol) என்ற சொல்லின் அர்த்தம் என்ன? இந்த ஒரு வார்த்தைக்கு பல்வேறுபட்ட பொருள் தரப்பட்டிருக்கின்றன. World of dead, grave, hell, pit (மரித்தவர்களின் உலகம், பாதாளம், நரகம், குழி - Ref: Strong's Hebrew Concordance Page 111, No.7585))

### Strong's Hebrew Lexicon Search Results

Result of search for "7585": sh'owl sheh-ole' or shol {sheh-ole'}; from 7592 ; Hades or the world of the dead (as if a subterranean retreat), including its accessories and inmates: —grave, hell ,pit.

என்று பொருள்படும். American standard version. Revised standard version, Lamsa version - போன்ற மொழிபெயர்ப்புக்களில் ஷியோல் என்ற வார்த்தையே மொழிபெயர்க்கப்படாமல் அப்படியே இடப்பட்டுள்ளது. இனி ஷியோல் என்று காணப்படுகிற சில வசனங்களை தியானிக்கலாம்.

சங்கீதம் 9:17 - துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள் **(KJV).**

“பொல்லார் பாதாளத்திற்கே திரும்புவார்கள். கடவுளை மறந்திருக்கும் வேற்றினத்தார் யாவரும் அங்கே செல்வர் **(NIV- All the wicked shall return to grave)”**

இந்த வசனங்களை இந்த மொழிபெயர்ப்புகளில் வாசிக்கும்பொழுது, தள்ளப்படுவார்கள் KJV - யில் என்ற வார்த்தைNIVல் ‘திரும்புவார்கள்” என்றுள்ளது. இவ்வசனம், முன் புறப்பட்ட இடத்திற்கு மீண்டுமாக திரும்புவதைக் குறிக்கும். ஒருவர் தற்காலத்தில் மரித்தபிறகு 1000 வருட ஆட்சியில் உயிர்த்தெழுதல் வாய்ப்பும், பின் ஒவ்வொரு தனிநபரின் தனித்தனி நியாயத்தீர்ப்பு(அதாவது சுயாதீனப்படி சத்தியத்தை ஏற்று நடக்கும் வாய்ப்பு)நடக்கும்போது மனப்பூர்வமான பாவிகள் மீண்டும் பாதாளத்திற்கே(கல்லறை) செல்லுவதை பொருள்படுத்துகிறது.

மேலும்,’ஷியோல் என்ற வார்த்தை KJV -ல் ‘நரகம்” என்றும் NIV-ல் பாதாளம் என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது ஏன்? அப்படியானால் ‘நரகம்” மற்றும் ‘பாதாளம்” என்ற வார்த்தைகள் ஒரே பொருளைத் தருகின்றனவா? இதைக்குறித்து வேறொரு வசனத்தை வாசிக்கலாம்.

ஆதியாகமம் 37:35 -“அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல்சொல்ல வந்து நின்றார்கள். ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான”

இங்கு ‘பாதாளம்” என்ற வார்த்தை ‘ஷியோல்” என்ற எபிரேய வார்த்தையிலிருந்து வருகிறது. ஆகவே மேல் வசனங்களில் நாம் பார்த்தபடி ‘ஷியோல்” என்னும் வார்த்தை பழைய ஏற்பாட்டில் ‘நரகம்” என்றும் ‘பாதாளம்” என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. மாறாக கொழுந்துவிட்டு எரியும் அக்கினியாக எவ்வாறு எடுத்துக்கொள்ளமுடியும்? அப்படியானால், உண்மையில் ‘நரகம்” என்பது எதைக் குறிக்கும்? ஒருவேளை ‘நரகம்” என்பதன் உண்மையான பொருளை’ஷியோல்” என்ற எபிரேய வார்த்தையின்மூலம் கண்டுபிடிக்கலாம்.

ஏசாயா 38:18 -“பாதாளம்(ஷியோல்) உம்மைத் துதியாது(ஷியோல்) உம்மைப் போற்றாது, குழியில்(ஷியோல்) இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை”

ஆம். இங்கு ஷியோல் என்ற வார்த்தை ‘பாதாளம்” என்றும்... ‘மரித்தநிலை” என்றும்... ‘குழி” என்றும்.. பொருள்படும் விதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது சத்தியத்தையும் அதின் பொருளையும் தேவன் நமக்கு போதிக்கும் விதமாகும்.

இப்படியாக நரகம் என்பது... பாதாளம் அல்லது குழி அல்லது ‘மரித்த நிலையில்” புதைந்து கிடப்பதாகும். மாறாக அதற்கு எரியும் நெருப்பு என்ற பொருளேதும் கிடையாது. மேலும் அக்கினி

இருக்கின்ற இடத்தில் வெளிச்சம் இருக்கவேண்டுமேயொழிய,

> யோபு 10:21 - காரிருளும் மரண அந்தகாரமுமான இருண்ட தேசமும், இருள்சூழ்ந்த ஒழுங்கில்லாத மரண அந்தகாரமுள்ள தேசமும்..

என்று உள்ளதை கவனிக்கவும். நரகம் அல்லது ஷியோல் என்பது, 'அழுகையும், ஆர்ப்பாட்டமும், கூக்குரலும் நிறைந்த இடம்" என்பதற்கு பதிலாக, 'அமைதியான" இடமாக சொல்லப்படுகிறது.

> சங்கீதம் 115:17 - மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள

துன்பங்களும் சித்திரவதைப்படக்கூடிய இடத்திற்குப் பதிலாக நரகம் அல்லது ஷியோல் என்பது மறதியின் நிலைமை என்று சொல்லப்படுகிறது.

> சங்கீதம் 88:11,12 - ...மறதியின் பூமியில் உமது நீதியும் அறியப்படுமோ.

நரகம் அல்லது ஷியோல் என்பது'இல்லாமல் போன நிலைமையை" குறிக்கிறது.

> பிரசங்கி 9:10 - செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய். நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே

மேற்கண்ட வசனங்களிலிருந்து நரகம் அல்லது ஷியோல் என்பது 'மரித்திருக்கும் நிலைமை" அன்றி வேறில்லை. ஆகவே பழைய ஏற்பாட்டில் நரகம் என்பது மரணநிலையை அல்லது பாதாளத்தை அல்லது .. குழியைக் குறிக்கும்.

இப்பொழுது புதிய ஏற்பாட்டில் 'நரகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூன்று வார்த்தைகளை ஆராய்ந்துபார்க்கலாம். முதலாவது கிரேக்க வார்த்தை

## 1.ஹேடஸ்' (Hades) / 9 முறை

**ஹேடஸ்** **Result of search for "86": 86.** haides *hah'-dace* from 1 (as negative particle) and 1492; properly, unseen, i.e. "Hades" or the place (state) of departed souls:—grave, hell

Outline of Biblical Usage**1)** name Hades or Pluto, the god of the lower regions **2)** Orcus, the nether world, the realm of the dead **3)** later use of this word: the grave, death, hell

In Biblical Greek it is associated with Orcus, the infernal regions, a dark and dismal place in the very depths of the earth, the common receptacle of disembodied spirits. Usually Hades is just the abode of the wicked, Luk 16:23, Rev 20:13, 14; a very uncomfortable place. (TDNT)

Authorized Version (KJV) Translation Count — Total: 11 AV — hell 10, grave 1

இந்த வார்த்தை எபிரேய வார்த்தையான 'ஷியோல்" என்பதற்கு நிகரான கிரேக்க வார்த்தையாகும். அதன் பொருள் பாதாளமாகும். இதை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒரு வசனத்தின் மூலம் நாம் உணரலாம். இதைக்குறித்து வாசிக்கையில்,

> சங்கீதம் 16:10 -"என் ஆத்துமாவைப் பாதாளத்தில்(ஷியோல்) விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீா"
>
> அப்போஸ்தலர் 2:27 -"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் (ஹேடஸ்)விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்"

இந்த இரண்டு மொழிகளிலும் அந்த வார்த்தை மாறினாலும் அதின் பொருள் மாறாதிருக்கிறதைப் பார்த்தீர்களா?

இது ஆங்கில வார்த்தையான 'Water" என்பது தமிழில் 'தண்ணீர்" என்றும்... இந்தியில் 'பானி" என்றும் அழைக்கப்படுவதுபோலாகும். மேலும் இயேசுகிறிஸ்து கூட நரகத்திற்குச் சென்றதாக நாம் வாசிக்கிறோம். இதைக் குறித்து வாசிக்கையில்,

> அப்போஸ்தலர் 2:31 -"அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லை."

ஆம். இயேசுவும் நரகத்திற்கு அல்லது ஹேடஸ்க்கு மூன்று நாட்கள் சென்றிருந்தார்.

அதாவது அவர் மூன்று நாட்கள் 'மரித்த நிலையில்" அல்லது பாதாளத்தில் உயிர்த்தெழும்வரை இருந்தார். கற்பனை செய்துபாருங்கள். நரகம் அல்லது ஹேடஸ் என்பது ஒரு வேதனை ஸ்தலமாக இருந்தால், பின்பு இயேசுவும்கூட அப்படிப்பட்ட வேதனை ஸ்தலத்திற்கு சென்றிருக்கவேண்டும்.

ஆனால் அவர் போகவில்லை என்று நாம் அறிவோம்.

ஆம். இயேசு சென்ற நரகம் அல்லது ஹேடஸ் என்பது மரித்த நிலையையே குறிக்கும். அவர் அங்கு மூன்று நாட்கள் சென்றிருந்தார்.

வெளி 1:18 ல் இயேசு கூறும்போது, '.. நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவனாயிருக்கிறேன்" என்று கூறுகிறாரே, இதன் பொருள் என்ன?

**திறவுகோல் :1** - மரணம் - இந்த யுகமுடிவில் மரண நிலையில் இருக்கும் உயிரோடே மரித்தோரைக்குறிக்கும்.

> லூக்கா 9:60 ல்,"மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்"

அதாவது அம்மாதிரியான ஜனங்களை ஜீவனுக்கு கொண்டுவரும் திறவுகோல்.

> 2தீமோத்தேயு 4:1 ல்,".. உயிரோடிருக்கிறவர்களும், மரித்தவர்களும்..."

**திறவுகோல் 2** - பாதாளம் .Hades கல்லறைக்கே சென்றுவிட்ட மரித்தோர் - இவர்களையும் நம்

கர்த்தர் மீண்டும் உயிரடையச் செய்யும் திறவுகோல், ஆங்கிலத்தில

**வெளி 1:18ல், And have the keys of "hell and death"** Ref : KJV English.

மேலும் மத்தேயு 11:23ல்,"வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்.".

**மேலும் லூக்கா 10:15ல், Ref:KJV : 'Shall be thrust down to hell(Hades) -**

இங்கு நாம் இஸ்ரயேலில் இருந்த ஒரு பட்டணத்தைக் குறித்து பார்க்கிறோம். இப்பகுதியிலே நம் கர்த்தர் அநேக காரியங்களையும் பிரசங்கங்களையும் இங்கு செய்தபடியினால் **(லூக்கா 17:24)** இப்பட்டணம் அறிவிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கியதால், இது வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் இப்பட்டணம்(ஜனங்கள்) தேவனுடைய சகாயங்களை மறுதலித்துப் போனதினால், இது கர்த்தரால் சபிக்கப்பட்டது. மேலும், இப்பட்டணம் உண்மையில் இருந்ததா என்று சொல்லுமளவிற்கு முற்றிலும் அழிக்கப்பட்டது. புதைபொருள் ஆராய்ச்சியாளர்களில்கூட கண்டுபிடிக்கப்படாமல்போனது. ஆக, இப்பட்டணம் Brought down to hell" எனும்போது நகரத்தின் அழிவை அல்லது இல்லாமல் போவதையே குறிக்கிறது.

மத்தேயு 16:18ல், கர்த்தர் பேதுருவிடம்,"நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் **(Hades)-(in Eng. Hell)** வாசல்கள் அதை(சபை) மேற்கொள்ளுவதில்லை"

எனும்போது, சுவிசேஷயுகத்தில் சபையில் அநேகம் பரிசுத்தவான்கள் (சபை) இரத்த சாட்சிகளாக மரித்தாலும், கர்த்தரின் வல்லமையினால் சபை கல்லறையிலிருந்து மிகவும் உன்னதமான உயிர்த்தெழுதலை பெறும் என்பதே இவ்வசனத்தின் மிகச்சரியான பொருளாகும்.

மேலும் நரகத்தில் மக்கள் சென்றுவிட்டால் விடுதலையே கிடையாது என்பதே இன்று அநேகரின் விசுவாசம். ஆகவே தேவனுடைய வசனத்தில் ஆராய்ந்தால்,

வெளி 20:13,14ல் - "மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன" - Ref in Eng.

**KJV - "And the Sea gave up the dead which were in it; and death and hell(grave) delivered up the dead... And death and hell(the grave) were cast into the lake of fire. This is the second death".**

இங்கு நரகத்திலிருந்து மக்கள் வெளியே வருவதோடு மரணமும் நரகமுமே அக்கினிக்கடலில்

தள்ளப்பட்டன எனும்போது, நரகமே அக்கினிக் கடலாக இருக்கும்போது மற்றுமொரு அக்கினிக்கடலில் தள்ளப்படவேண்டுமா? இதன்பொருள் என்னவெனில், 1000 ஆம் ஆண்டு அரசாட்சியின் முடிவிலே கடைசி சத்துருவாகிய மரணத்தை நிரந்தரமாக இவ்வுலகில் இல்லாமல் செய்வதையே குறிக்கிறது.

> 1கொரிந்தியர் 15:26 - ல்"பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்"
> வெளி 21:4 ல் -"இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் யாவும் ஒழிந்துபோயின" என வாசிக்கிறோம்.

## 2.கெஹன்னா (Gehenna) / 12 முறை

> **கெஹன்னா - Result of search for "1067" : 1067.** <u>geena</u> *gheh'-en-nah* of Hebrew origin (1516 and 2011); valley of (the son of) Hinnom; ge-henna (or Ge-Hinnom), a valley of Jerusalem, used (figuratively) as a name for the place (or state) of everlasting punishment:—hell.
>
> <u>Outline of Biblical Usage</u> **1)** Hell is the place of the future punishment call "Gehenna" or "Gehenna of fire". This was originally the valley of Hinnom, South of Jerusalem, where the filth and dead animals of the city were cast out and burned; a fit symbol of the wicked and their future destruction.
>
> Authorized Version (KJV) Translation Count — Total: 12
>
> AV — hell 9, hell fire + 3588 + 4442 3

இது புதிய ஏற்பாட்டில் வரும் 2வது கிரேக்க வார்த்தையாகும். இதுவும் நரகம் என்றே 12 முறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நாம் ஒரே ஒரு வசனப்பகுதியை ஆராய்ந்தால் இதன் விளக்கமும் எளிதாக புரிந்து கொள்ளலாம்.

> மாற்கு 9:43-48 வசனங்களில், ■உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு..நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்தில் போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்■

இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள 'அவியாத அக்கினியுள்ள நகரம்", மூல பாஷையில் கெஹன்னா என்ற வார்த்தை வருகிறது.

கிரேக்க பாஷையில் கெஹன்னா என்பதை எபிரேயு பாஷையில் இன்னோம் பள்ளத்தாக்கு( Hinnom) என அழைப்பர். இப்பள்ளத்தாக்கு எருசலேம் நகருக்கு வெளியில்




பட்டணத்தினுடைய கழிவுகள், குப்பைகள் இறந்துபோன மிருகங்களின் உடல்கள், இப்பள்ளத்தாக்கில் போடப்பட்டு எரிக்கப்படும். கழிவுகள் குப்பைகள் உயரமானவுடன் நெருப்பு வைக்கப்பட்டு குறைக்கப்படுவதுடன், நெருப்பில் அழியாத புழுக்கள் தோன்றி அவைகளை அழிக்கும் உயிருள்ள எந்த பொருளும் அதில் போட அனுமதியில்லை.

பழைய ஏற்பாட்டின் காலத்தில், இப்பள்ளத்தாக்கில் இஸ்ரயேல் ஜனங்கள் தோப்பேத் என்னும் விக்கிர கடவுளுக்காக தங்கள் குழந்தைகளை அக்கினியில் போட்டார்கள் **(எரேமியா 7:31)**.



> மேலும் **எரேமியா 32:25** ல், "இஸ்ரயேல் ஜனங்கள் மோளேகுக்கென்று இப்பள்ளத்தாக்கில் தங்கள் குழந்தைகளை தீக்கடக்கப் பண்ணினார்கள். அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நான் அவர்களுக்கு கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை"

என தேவன் கூறுகிறார்.

இவ்வாறு செய்துவந்த இஸ்ரயேல் ஜனங்களே, பின்பு இது தேவனுக்கு அருவருப்பானதும், விரோதமானதுமாகும் என்று எண்ணி, அந்தப் பள்ளத்தாக்கையே பின்பு குப்பை கூளம் போடும் இடமாக்கினார்கள். இதுவே கெஹன்னா (Gehenna) ஆகும்.

இவ்வசனப் பகுதியில் அக்கினி அவியாமலும், புழு சாவாமலும் இருக்கும் எனும்போது, இப்பள்ளத்தாக்கில் எப்போதும் அக்கினி புகைந்துகொண்டும், நெருப்பில் அகப்படாத பொருட்களில் புழுக்கள் சாகாமலும் இருந்துகொண்டே இருக்கும். ஆக, அக்கினியும் புழுவும் ஒரு பொருளின் அழிவின் வேலையை ஓயாமல் செய்துகொண்டிருக்கும் என்பதே, நம் கர்த்தர் இங்கு கூறினதின் பொருளாகும். மேலும் இவ்வசனப்பகுதியை சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டால் என்ன ஆகும் என்பதை யோசிக்கவேண்டும்.

நாம் அனைவரும் கையில்லாதவர்களாகவும், கண் கை கால் இல்லாதவர்களாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் நம் உடலே நமக்கு எவ்வளவு முறை இடறல் உண்டாக்குகிறது என்று உணரவேண்டும். ஊனமாய் தேவனுடைய இராஜ்யத்தில் யாராவது பிரவேசிப்பார்களா, ஆக, இப்பகுதியானது அடையாள மொழியில் அல்லது உவமை பாணியில் நம் கர்த்தரால்

சொல்லப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியானது தம்முடைய சீஷர்களுக்கு அவரால் சொல்லப்பட்டது.

வசனம் 43ல், கையைத் தறித்துப்போடு எனும்போது, உண்மையான கிறிஸ்துவின் உபதேசம் கேட்டு அவரை பின்பற்ற முடிவெடுக்கும்போது நம் பழைய உலகத்தின் பிரகாரம் நண்பர்கள்(வலது கை, இடது கை) நம்மை பாவ வழிக்கு அழைத்தால் உடனடியாக அவர்களுடைய பழக்கங்களை வெட்டி விடுவதையே குறிக்கிறது. ஆனால் இது அநேகருக்கு இக்காலங்களில் மிகவும் கடினமான ஒன்று.

வசனம் 45ல்,"கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதை தறித்துவிடு"

எனும்போது, கிறிஸ்துவுக்குள் வரும் முன்பு, நாம் சென்ற அநேக பாவ இடங்களையே குறிக்கிறது. இப்போது நாம் அப்பழக்கங்களை நிறுத்திவிடுவதையே குறிக்கிறது. இரகசியமாகக்கூட இவ்விடங்களுக்குச் செல்லும் பழக்கத்தை தாமாகவே விட்டுவிடவேண்டும்.

வசனம் 47ல், கண் என்று குறிப்பிடுவது கிறிஸ்துவின் உபதேசம் ஏற்றுக்கொள்வதற்கு முன் நம் பார்வை அல்லது கண்களின் இச்சைப்படி நடந்திருப்போம். ஆனால் இப்போது இரகசியமாகக்கூட நம் பார்வை இருக்கக்கூடாது என்பதையே இங்கு விளக்குகிறார். கிறிஸ்துவின் உபதேசம் கேட்டு அதே நேரத்தில் உபயோகமில்லா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இச்சையுடன் எல்லார் முன்பாகவோ அல்லது இரகசியமாகவோ பார்த்தால் அது கிறிஸ்துவைப் பின்பற்றும் வழியா?

ஆக, இங்கு உபயோகப்படுத்தப்பட்ட அக்கினியும், புழுவும் இரண்டாம் மரணத்தையே குறிக்கிறது. பார்ப்பதற்கு முதல் மரணமும், இரண்டாம் மரணமும்(First & Second death) ஒரே மாதிரி தோன்றினாலும், இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. எப்படியெனில், இப்போது யார் மரணமடைந்தாலும் அவர்கள் கல்லறைக்குச் செல்கின்றனர் (Hell). ஆனால் மீண்டும் உயிரடையலாம். ஆனால் 1000 ஆண்டில் எல்லா வாய்ப்புக்களும் அளிக்கப்பட்டு, மனப்பூர்வமாய் பாவஞ்செய்பவர்களுக்கு இனி உயிர்த்தெழுதலே இல்லை. இது இரண்டாம் மரணம். இதுபற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

மத்தேயு 10:28 -"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே (கெஹன்னா) அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்"

எனும்போது, மீண்டும் ஜீவன் இல்லாமல் செய்ய மனிதருக்கு சாத்தியம் இல்லை. ஆனால் மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களை முற்றிலும் அழிக்க தேவனுக்கு அதிகாரம் உண்டு **(வெளி 21:3 , ஏசாயா 26:10)** என்பதையே இங்கு காட்டுகிறது. இதில் சாத்தானும் அவனைப் பின்பற்றும் தூதர்களும் அடங்குவர் **(வெளி 20:9, மத்தேயு 25:4)** இது தெளிவாக இரண்டாம் மரணத்தையே குறிக்கிறது. இதுவே பாவிகளின் நித்திய நியாயத்தீர்ப்பு ஆகும். எக்காலத்திலும் தேவ திட்டத்தில்

பாவத்தின் சம்பளம் மரணமேயாகும்-**ரோமர் 6:23**. இம்மரண நிலையே வேதத்தில் நரகம், பாதாளம், குழி என சொல்லப்பட்டுள்ளதே தவிர, அவியாத அக்கினி என புரிந்துகொள்வது எவ்வாறு ஏற்புடையதாகும்?

## 3. டார்டாரூ / டார்டாரஸ் (Tartaroo/ Tartarus) 1 முறை

**டார்டாரூ Result of search for "5020":**

**5020.**tartaroo *tar-tar-o'-o* from Tartaros (the deepest abyss of Hades); to incarcerate in eternal torment:—cast down to hell.

Outline of Biblical Usage

**1**)the name of the subterranean region, doleful and dark, regarded by the ancient Greeks as the abode of the wicked dead, where they suffer punishment for their evil deeds; it answers to Gehenna of the Jews **2**) to thrust down to Tartarus, to hold captive in Tartarus

AV — cast down to hell 1

இவ்வார்த்தையும் நரகம் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் வேதத்தில் ஒரே ஒருமுறை மட்டும் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

2பேதுரு 2:4ல், "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், **அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே (டார்டாரூ - கிரேக்கு)** தள்ளி நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக்கொடுத்து.."

இங்கு பேதுரு அப்போஸ்தலர் பயன்படுத்திய டார்டாரூ என்ற வார்த்தையை மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வாறு மொழிபெயர்ப்பது என புரியாமல், பாவஞ்செய்த தூதர்களாக இருப்பதினால் அவர்களுக்கு 'நரகம்" என மிக தைரியமாக போட்டுவிட்டனர்.

பேதுரு அப்போஸ்தலன் பயன்படுத்திய இவ்வார்த்தை கிரேக்க புராணங்களில் டார்டாரஸ் /Tartarus என்ற வார்த்தைக்கு ஏறத்தாழ பொருந்திவருகிறது. **டார்டாரஸ் என்றால் சிறை அல்லது படுகுழி (Dark Abyss or Prison) என்று பொருள்** ஆனால் டார்டாரூ(Tartaroo) என்றால் ஒரு இடம் என்பதைவிட ஒரு செயலுக்கே பொருந்தி வருகிறது(Refer More to an act than to a place)

எபேசியர் 6:12ல் -"..வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின்.." என்றும்,

எபேசியர் 2:2ல், சாத்தான்பற்றி,"..ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய.."

எனவும் வாசிக்கிறோம். ஆக, இங்கு சிறை அல்லது படுகுழி என தூதர்களுக்குச் சொல்லும்போது, பரலோகமாகிய உன்னத வாசஸ்தலத்திலிருந்து பூமியை சுற்றியுள்ள ஆகாய மண்டலம் அவர்களுக்கு பாதாளம் ஆகும். ஆனால் மனிதருக்கு பாதாளம் என்றால் பூமிக்கடியில் (6 அடிநிலம்) குறிக்கிறது.

அந்தகாரச் சங்கிலிகளினால் கட்டி எனும்போது, இருளில் அல்லது இரவு நேரங்களில் மாத்திரமே அவர்களால் சில நபர்கள்மூலம் அஞ்சனம் (Mediums /Witch craft) மூலமாக கிரியை செய்யமுடியும். மரித்தவர்போன்று வருவது உட்பட அநேக வஞ்சகங்களைச் செய்வது, இவர்களின் நியாயத்தீர்ப்புப்பற்றி **மத்தேயு25:41ல், அழிவே** என வேதம் தெளிவாகக் கூறுகிறது. ஆக, இவ்வார்த்தையில் நித்தியவேதனை ஸ்தலம் அல்லது அக்கினி என்ற அர்த்தம் வருவதில்லை.

நரகம் ஒரு நித்திய வேதனை ஸ்தலம் என நம்புகிறவர்கள் வேதத்தில் வரும் எட்டு வசனப்பகுதியை வைத்தே நம்புகின்றனர். ஆனால் இந்த எட்டு பகுதிகளும் ஆச்சரியமான அடையாளமொழியில் (Higher symbolic) சொல்லப்பட்டிருக்கிறதே தவிர சொல்லர்த்தமான முறையில் (Literal) இல்லை. அதில் இரு இடங்களில் **வெளி 14:10,11 மற்றும் 20:10.**

வெளிப்படுத்தின விசேஷம் முழுவதும் அடையாள மொழியில் உள்ளது. இன்னும் இரண்டு இடங்கள் கர்த்தருடைய உவமையில் வருகிறது **(மத்தேயு 25:31-46, மற்றும் லூக்கா 16:19-31)** இன்னும் இரண்டு இடங்கள் **(மாற்கு 9:42-48,49),** ஒரு இடம் **(ஏசாயா 66:24, மற்றுமொரு இடம் யூதா 7).** இவ்வசனப் பகுதியினை கவனமாக ஆராய்ந்தால் நித்திய வேதனை ஸ்தலமாக இல்லை. மாறாக முழுமையான அழிவை குறிக்கிறது.

| சங்கீதம் 145:20ல்,"**துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்**" |
|---|

என வாசிக்கிறோம்.

மேலும் தேவன் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் தனக்கு பயந்து (Fear) தொழுதுகொள்ளவேண்டுமென்று விரும்பாமல்,

| யோவான் 4:24ல், "ஆவியோடும் (With sound mind) **உண்மையோடும்** தொழுதுகொள்ளவேண்டும" |
|---|

என்று விரும்புகிறார்.வேதத்தில் நாம் எங்கு பார்த்தாலும் தேவன் அன்புள்ளவராக இருக்கிறார் எனும்போது,பாவிகளுக்காக இயேசு மரித்து அவர்களை இரட்சிப்பார் என விசுவாசிக்கும் யாவரும், இந்த நித்திய வேதனை ஸ்தல உபதேசத்தினை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.
மேலும், ஜனங்கள் தங்கள் குமாரரை தீக்கடக்கப் பண்ணுவதையே விரும்பாத தேவன், எவ்வாறு கோடி கோடி மக்களை அக்கினியில் விடுவார்(உபாகமம் 18:9-14).

**யோவான் 3:16** ல், தன் குமாரனையே தந்து ஈடுபலியாக்கி, மனிதருக்கு இரட்சிப்பு அருளியிருக்கிறாரே. மேலும் **ரோமர் 5:8ல்,**'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்"

ரோமர் 5:10ல்,“நாம் தேவனுக்குச் **சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிகநிச்சயமாமே**



ஆகவே **எசேக்கியேல் 33:11 மற்றும் 18:32** வசனங்களில், தேவன் துன்மார்க்கருடைய மரணத்தை விரும்பாமல், அவன் தன் வழியை விட்டு திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன். நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறாரே. தேவனுடைய அளவற்ற அன்பு நீதியான தீர்ப்பு ஆகியவற்றை யோசித்துப் பாருங்கள்.ஆகவே நரகம் ஒரு நித்திய வேதனை ஸ்தலம் என்று கூறுவது சுலபம். ஆனால் அதை நிரூபிக்க முடியாது. அப்.பவுலும்கூட தன் நிருபத்தில் எந்தவொரு இடத்திலும் இது பற்றிப் பேசவேயில்லை என்பதைக் கருத்திற்கொள்க.

**எபிரேயர் 12:29** ல், நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே தவிர நெருப்பில் ஜனங்களை போடுகிறவரல்ல.அப்படியொரு ஸ்தலம் தேவ திட்டத்தில் இல்லாததற்கு நாம் எத்தனை நன்றி உள்ளவர்களாயிருக்கவேண்டும்.

**தேவன்தாமே நம் அனைவருக்கும் கிருபை செய்வாராக.**




**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/